**விண்ணப்பங்களுக்கான கோரல் : இலங்கையில் சுற்றுச்சூழலியல் கதைகளின் அறிக்கையிடலுக்கான நிதியுதவிகள்**

கால எல்லை: 19 அக்டோபர் 2021, 11:59 PM கொழும்பு

info.ejn@internews.org

Internews' Earth Journalism Network (EJN) (EJN) இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு நாட்டின் ஆழமான சுற்றுச்சூழல் கதைகளை உருவாக்குவதற்கு நிதியுதவிகளை வழங்குகிறது.

தயவுசெய்து பின்வரும் பகுதிகளை கவனமாக படியுங்கள், அவை தகைமை மற்றும் விண்ணப்ப செயன்முறை பற்றிய முக்கியமான தகவல்களைக் கொண்டுள்ளன.

**பின்னணி**

பல தசாப்தங்களாக, இலங்கை, ஒரு உயிர்ப்பல்வகைமையின் மையமாக, காலநிலை மாற்றம், வன துண்டாடல் மற்றும் மாசடைதலின் தாக்கங்கள் என, மெதுவான அவசரநிலைகளை அனுபவித்து வருகிறது.

திட்டமிடப்படாத அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பாரிய உட்கட்டமைப்பு முயற்சிகள் தாவர மற்றும் விலங்குகளின் சமுதாயங்கள் மற்றும் உள்ளூர் இனங்களை அச்சுறுத்துவதுடன் வாழ்விட இழப்பு மற்றும் இயற்கை வளங்களின் அழிவை துரிதப்படுத்துகின்றன.

இந்த தொடர்ச்சியான சுற்றுச்சூழலியல் சீரழிவு வாழ்வாதாரங்கள், மனித பாதுகாப்பு மற்றும் இலங்கையின் சூழற்தொகுதி உயிர்ப்பல்வகைமையை அச்சுறுத்துகிறது: கிட்டத்தட்ட 22 மில்லியன் சனத்தொகையை ஆபத்திற்குள்ளாக்குகின்றது.

ஏறக்குறைய மூன்று தசாப்த கால போரிலிருந்து மீண்டெழுகின்ற இந்து சமுத்திர தீவு இன்னமும் மோதல் தொடர்பான சுற்றுச்சூழலியல் பாதிப்புகளை முழுமையாக மதிப்பிடவில்லை. தற்போது, ஏற்கனவேயுள்ள மனித மற்றும் சுற்றுச்சூழல் சுகாதார பிரச்சினைகள் உலகளாவிய தொற்றுநோயால் மிகைப்படுத்தப்பட்ட நிலையில் புதிய பாதிப்பினை உருவாக்குகின்றது.

சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்களின் தீவிரம் இருந்தபோதிலும், இந்த பிரச்சினைகளில் பல குறைவாக அறிக்கையிடப்பட்டோ அல்லது

கவனிக்கப்படாமலோ போய்விட்டதுடன், இதன் விளைவாக ஏற்பட்டுள்ள தகவல் மற்றும் அறிவு இடைவெளிகள் தீர்க்கப்பட வேண்டும்.

**கதை கருப்பொருள்கள்**

நாங்கள் கீழ்வருவனவற்றை நன்கு புரிந்துகொள்வதற்கு வாசகர்களை உந்துகின்ற புலனாய்வு சுற்றுச்சூழல் கதைகளை இலங்கையிலிருந்து வரவேற்கிறோம்:

- மனித நடவடிக்கைகள் மற்றும் ஊழலால் ஏற்படும் அச்சுறுத்தல்கள்.
- சுற்றுச்சூழல் அழிவைத் தணிக்கும் சிறந்த நடைமுறைகள்.
- இயற்கை வளங்களை முகாமை செய்வதற்கு சிறந்த நிர்வாக நடவடிக்கைகள்.
- நலிவடைந்த மற்றும் பழங்குடி சமூகங்களின் பிரச்சினைகள்.
- காலநிலை மாற்றம் மற்றும் சூழல்தொகுதிகள் மற்றும் சமூகங்கள் மீதான அதன் தாக்கம்.

பரவலாக உள்ளடக்கப்படாத தலைப்புகள் அல்லது கதைகளில் கவனம் செலுத்தும் முன்மொழிவுகள் விரும்பப்படுகின்றன. ஏற்கனவே அதிகளவான ஊடக கவனத்தை ஈர்த்த அல்லது தனித்துவமான கோணத்தை அல்லது அணுகுமுறைகளை வழங்காத பிரச்சினைகள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் குறைவாகும்.

**தகமைகள்**

கதைகள் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படலாம், ஆனால் விண்ணப்பங்கள் ஆங்கிலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆங்கிலத்தில் அல்லாத கதைகளை உருவாக்கும் விண்ணப்பதாரர்கள் ஆங்கில மொழிபெயர்ப்பை வழங்க வேண்டும்; மொழிபெயர்ப்புக்கான செலவு முன்மொழியப்பட்ட பாதீட்டில் சேர்க்கப்படலாம்.

நாங்கள் இலங்கை பிரஜைகளான ஊடகவியலாளர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வோம். இலங்கையில் எந்த ஊடகத்துறையிலும் (நிகழ்நிலை, அச்சு, தொலைக்காட்சி அல்லது வானொலி) பணிபுரியும் பத்திரிகையாளர்களால் விண்ணப்பிக்கமுடியும். நாங்கள் சர்வதேச, தேசிய, உள்ளூர் மற்றும் சமூக அடிப்படையிலான அனைத்து

வகையான ஊடக நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் சுயாதீன செய்தியாளர்களிடமிருந்தான விண்ணப்பங்களை ஊக்குவிக்கிறோம். நீங்கள் அறிக்கையிடும் முன்மொழிவு உங்கள் வெளியீடு சென்றடையும் வாசகர்களை இலக்காகக் கொள்ளவேண்டும் என்று நாங்கள் கேட்கிறோம்.

தனிப்பட்ட மற்றும் குழு விண்ணப்பங்களை நாங்கள் ஏற்றுக்கொள்வோம், ஆனால் குழு விண்ணப்பத்திற்கு நிதியுதவி வழங்கப்பட்டால், குழுவின் சார்பாக ஓர் பிரதான விண்ணப்பதாரரின் பெயரில் விண்ணப்பிக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

**கதை அணுகுமுறை & வடிவமைப்பு**

பாதீட்டு சமர்ப்பிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவு மற்றும் தேவைகளைப் பொறுத்து சராசரியாக $ 1000 அமெரிக்கடொலர் பெறுமதியான 10 நிதியுதவிகளை வழங்குவதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதிக செலவுடைய மற்றும் உருவாக்குவதற்கு அதிக காலம் எடுக்கின்ற புத்தாக்கமான அல்லது புலனாய்வு அணுகுமுறைகளைப் பயன்படுத்துகின்ற கதைகளுக்கு அதிகளவான நிதியுதவியை வழங்குவதற்கு நாங்கள் பரிசீலிப்போம்.

நாங்கள் 15 டிசம்பர் 2021 க்கு முன்னராக கதைகளை வெளியிட வேண்டும் என்ற கடுமையான காலக்கெடுவுடன், ஒக்டோபர் மாத பிற்பகுதியில் நிதியுதவிகளை வழங்க திட்டமிட்டுள்ளோம். விண்ணப்பதாரர்கள் தங்கள் பணித் திட்டத்தை உருவாக்கும்போது இந்த கால எல்லையை கருத்தில் கொள்ள வேண்டும்; காலஎல்லை நீட்டிக்கப்படமாட்டாது.

அனைத்து விண்ணப்பதாரர்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்பைப் பயன்படுத்தி கோரப்படும் தொகைக்கான நியாயப்படுத்தல்களுடனான ஒரு விரிவான பாதீட்டை வழங்க வேண்டும். நாங்கள் ஒவ்வொரு நிதியுதவிக்குமென ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கவில்லை, ஏனெனில் இந்த வகை அறிக்கையிடலை மேற்கொள்ளவதற்கு உங்களுக்குத் தேவையானவற்றை நீங்களே கருதுமாறு நாங்கள் உங்களைக் கேட்கின்றோம். வரவு செலவுத் திட்டங்கள் நியாயமானவையாக இருக்க வேண்டும் என்றும், அறிக்கையிடலுக்குத் தேவையான பயணம் மற்றும் தங்குமிடம் போன்ற செலவுகளைக் உள்ளடக்க வேண்டும் என்றும் நாங்கள் கேட்கின்றோம். விண்ணப்பதாரர்களிடம் ஏற்கனவே இருக்கின்ற உபகரணங்களின் மூலமாக (கேமராக்கள், ட்ரோன்கள், லைட்டிங், ட்ரைபாட்கள் போன்றவை) கதைகள் தயாரிக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்ப்பதுடன், புதிய பொருட்களை

வாங்குவதில் அதிகளவில் கவனம் செலுத்தும் அல்லது விண்ணப்பதாரர்களின் ஊதியத்திற்கு அதிக அளவு செலவிடும் பாதீடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

களத்தில் இருக்கும்போது கொவிட் -19 க்கான சிறந்த சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு செய்தியாளர்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம், எனவே நீங்கள் உங்களுக்கோ அல்லது நேர்காணல் செய்யும் நபர்களுக்கோ ஆபத்தை ஏற்படுத்த வேண்டாம். தேவைப்படின், உங்கள் பாதீட்டில் கொவிட்டிற்கான பரிசோதனைகள் அல்லது தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் போன்ற எந்தவொரு கொவிட் தொடர்பான செலவுகளையும் நீங்கள் உள்ளடக்க வேண்டும்.

நிதியுதவி வழங்கப்படுபவர்கள் இண்டர்நியூஸின் EJN ஆதரவுடன் கதை உருவானது என்ற அறிவிப்புடன், அவர்கள் தொடர்புடைய ஊடகங்களில் முதலில் தங்கள் கதைகளை வெளியிட அல்லது ஒளிபரப்ப இயலும். Internews EJN மற்றும் நிதியுதவியாளர், ஸ்வீடிஷ் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு நிறுவனம் (Sida) ஆகியவற்றிற்கு கதைகளைத் திருத்த, வெளியிட, ஒளிபரப்ப மற்றும் மீள்விநியோகிக்க உரிமை உண்டு.

சுயாதீன செய்தியாளர்கள் வெளியிடுவதற்கான அல்லது ஒளிபரப்புவதற்கான தங்கள் திட்டத்தை சுட்டிக்காட்ட வேண்டும் என்பதுடன், அனைத்து விண்ணப்பதாரர்களும் 15 டிசெம்பர் 2021 இற்கு முன்னராக கதையினை வெளியிடுவதற்க உறுதி வழங்கும் தங்கள் ஆசிரியரின் சம்மதக் கடிதத்தை வழங்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**மதிப்பிடலுக்கான நியதிகள்**

விண்ணப்பதாரர்கள் தங்கள் கதைக்கான முன்மொழிவுகளை உருவாக்கும் போது பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

- தொடர்பு: முன்மொழிவு விண்ணப்பத்தின் நியதிகள் மற்றும் குறிக்கோள்களை பூர்த்தி செய்கின்றதா? இந்தக் கதை ஏன் மற்றும்

யாருக்கு முக்கியமானது? இலக்கு வாசகர்களுக்கான பிரதான கரு, சூழல் மற்றும் ஒட்டுமொத்த மதிப்பு தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளதா?

- கோணம்: கதை ஏற்கனவே வெளியாகிய விடயமாக இருப்பின், உங்கள் முன்மொழிவு விடயத்திற்கு புதிய உட்பார்வைகளைக் கொண்டுவருகிறதா அல்லது புதிய கோணத்தை வழங்குகின்றதா?
- தாக்கம்: முன்மொழிவு அறிவுறுத்துகின்ற மற்றும் ஈடுபடுத்துகின்ற, கவனத்தை ஈர்க்கின்ற, விவாதத்தைத் தூண்டுகின்ற மற்றும் செயற்பாட்டைத் தூண்டுகின்ற ஒரு கதை தொகுப்பினை அல்லது புலனாய்வு கூறினைக் கொண்டுள்ளதா?
- புத்தாக்கமான கதைசொல்லல்: ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகள், மல்டிமீடியா மற்றும் தரவு காட்சிப்படுத்தல் ஆகியவற்றின் பயன்பாடு ஒரு பலமாகக் கருதப்படும்.

### விண்ணப்ப செயன்முறை

1. பக்கத்தின் மேலே உள்ள 'இப்போது விண்ணப்பிக்கவும்' என்ற பொத்தானைக் கிளிக் செய்யவும்.

2. உங்களிடம் ஏற்கனவே கணக்கு இருந்தால், நீங்கள் அதில் உள்நுழைய வேண்டும். இல்லையென்றால், பக்கத்தின் மேல் வலதுபுறத்தில் உள்ள "வலையமைப்பில் சேர்" என்பதை கிளிக் செய்வதன் மூலம் நீங்கள் புதிதாக ஒரு கணக்கில் பதிவு செய்ய வேண்டும்.

3. நீங்கள் விண்ணப்பிக்க தொடங்கி, பின்னர் மீண்டும் வந்து முடிப்பதற்கு விரும்பினால், நீங்கள் 'வரைவைச் சேமிக்கவும்' என்பதைக் கிளிக் செய்யலாம். வரைவுக்கு மீண்டும் திரும்புவதற்கு, நீங்கள் opportunity என்பதற்கு சென்று விண்ணப்பத்தை இறுதி செய்வதற்கு 'இப்போது விண்ணப்பிக்கவும்' என்பதைக் கிளிக் செய்ய வேண்டும்.

4. விண்ணப்பங்கள் கோரப்பட்ட தொகைக்கு நியாயப்படுத்தலுடனான விரிவான பாதீட்டை வழங்க வேண்டும். பாதீட்டு வடிவமைப்பை இங்கே பதிவிறக்கவும். விண்ணப்பதாரர் ஏற்கனவே கொண்டிருக்கின்ற உபகரணங்களின் பயன்பாட்டில் (கமராக்கள், ட்ரோன்கள், லைட்டிங், ட்ரைபாட்கள் போன்றவை உட்பட) முன்மொழிவுகள் பெரும்பாலும் தங்கியிருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம், மேலும் புதிய பொருட்களை வாங்குவதில் அதிக கவனம் செலுத்தும் பாதீடுகளை கருத்தில் கொள்ள

மாட்டோம். குறிப்பாக விண்ணப்பதாரர் ஒரு சுயாதீனமானவராக இருந்தால், செய்தியாளர்களின் ஊதியத்திற்கான சில செலவீனங்களை நாங்கள் கருத்தில் கொள்வோம். ஆனால் இது மொத்த பாதீட்டில் ஒரு சிறிய பகுதியாக இருக்க வேண்டும். தேவைப்படின், மொழிபெயர்ப்புக்கான செலவை உள்ளடக்கவும். கதைக்கு வேறு எந்த நன்கொடையாளர்களிடமிருந்தும் நிதி பெறுகிறீர்கள் என்றால் உங்கள் பாதீட்டில் தயவுசெய்து குறிப்பிடவும்.

5. நீங்கள் இரண்டு மாதிரிக் கதைகளை அல்லது தொடர்புடைய கதைக்கான இணைப்புகளை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்ப செயன்முறையின் ஒரு பகுதியாக இவற்றை பதிவேற்றும்படி கேட்கப்படுவீர்கள்.

*உங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதில் உங்களுக்கு பிரச்சினைகள் இருந்தால் அல்லது நிதியுதவிகள் பற்றி கேள்விகள் இருந்தால், தயவுசெய்து info.ejn@internews.org க்கு மின்னஞ்சல் செய்யவும். இந்த வாய்ப்பு தொடர்பாக வேறு எந்த இன்டர்நியூஸ் மின்னஞ்சலையும் தொடர்பு கொள்ளாதீர்கள், ஏனெனில் நாங்கள் அதனைப் பெற மாட்டோம்.*